ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# பெரியாழ்வார் அருளிச்செய்த
# ॥ வட்டுநடுவே ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ வட்டுநடுவே ॥

## புறம் புல்கல்

‡வட்டு நடுவே⋆ வளர்கின்ற⋆ மாணிக்க
மொட்டு நுனையில்⋆ முளைக்கின்ற முத்தே போல்⋆
சொட்டுச் சொட்டென்னத்⋆ துளிக்கத் துளிக்க⋆ என்
குட்டன் வந்தென்னைப் புறம் புல்குவான்⋆
கோவிந்தன் என்னைப் புறம் புல்குவான் (1)

கிங்கிணி கட்டிக்⋆ கிறி கட்டி⋆ கையினில்
கங்கணம் இட்டுக்⋆ கழுத்தில் தொடர் கட்டி⋆
தன் கணத்தாலே⋆ சதிரா நடந்து வந்து⋆
என் கண்ணன் என்னைப் புறம் புல்குவான்⋆
எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் (2)

கத்தக் கதித்துக்⋆ கிடந்த பெருஞ்செல்வம்⋆
ஒத்துப் பொருந்திக் கொண்டு⋆ உண்ணாது மண் ஆள்வான்⋆
கொத்துத் தலைவன்⋆ குடி கெடத் தோன்றிய⋆
அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான்⋆
ஆயர்கள் ஏறென் புறம் புல்குவான் (3)

நாந்தகம் ஏந்திய⋆ நம்பி சரண் என்று⋆
தாழ்ந்த தனஞ்சயற்காகி⋆ தரணியில்
வேந்தர்கள் உட்க⋆ விசயன் மணித் திண் தேர்⋆
ஊர்ந்தவன் என்னைப் புறம் புல்குவான்
உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் (4)

வெண் கலப் பத்திரம்⋆ கட்டி விளையாடி⋆
கண் பல செய்த⋆ கருந்தழைக் காவின் கீழ்⋆
பண் பல பாடிப்⋆ பல்லாண்டிசைப்ப⋆ பண்டு
மண் பல கொண்டான் புறம் புல்குவான்⋆
வாமனன் என்னைப் புறம் புல்குவான் (5)

www.prapatti.com

சத்திரம் ஏந்தித்⋆ தனி ஒரு மாணியாய்⋆
    உத்தர வேதியில்⋆ நின்ற ஒருவனை⋆
கத்திரியர் காணக்⋆ காணி முற்றும் கொண்ட⋆
    பத்திராகாரன் புறம் புல்குவான்⋆
பார் அளந்தான் என் புறம் புல்குவான் (6)

பொத்த உரலைக் கவிழ்த்து⋆ அதன் மேல் ஏறி⋆
    தித்தித்த பாலும்⋆ தடாவினில் வெண்ணெயும்⋆
மெத்தத் திருவயிறார⋆ விழுங்கிய⋆
    அத்தன் வந்தென்னைப் புறம் புல்குவான்⋆
ஆழியான் என்னைப் புறம் புல்குவான் (7)

மூத்தவை காண⋆ முது மணல் குன்றேறிக்⋆
    கூத்துவந்தாடிக்⋆ குழலால் இசை பாடி⋆
வாய்த்த மறையோர் வணங்க⋆ இமையவர்
    ஏத்த வந்தென்னைப் புறம் புல்குவான்⋆
எம்பிரான் என்னைப் புறம் புல்குவான் (8)

கற்பகக் காவு⋆ கருதிய காதலிக்கு⋆
    இப்பொழுதீவன் என்று⋆ இந்திரன் காவினில்⋆
நிற்பன செய்து⋆ நிலாத் திகழ் முற்றத்துள்⋆
    உய்த்தவன் என்னைப் புறம் புல்குவான்⋆
உம்பர் கோன் என்னைப் புறம் புல்குவான் (9)

‡ஆய்ச்சி அன்றாழிப் பிரான்⋆ புறம் புல்கிய⋆
    வேய்த் தடந்தோளி சொல்⋆ விட்டுசித்தன் மகிழ்ந்து⋆
ஈத்த தமிழ் இவை⋆ ஈரைந்தும் வல்லவர்⋆
    வாய்த்த நன் மக்களைப் பெற்று⋆ மகிழ்வரே (10)

‖ பெரியாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com